

மாமல்லபுரம் கடற்கரை கோவில் வளாகத்தில் இந்திய நாட்டிய விழாவினை குறு சிறு மற்றும் நடுதரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்தரன் ஆகியோர் கண்டு களித்தனர். இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், செங்கல்பட்டு சார் ஆட்சியர் திருமதி எஸ். மாலதி ஹெலன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் கோ.காமராஜ், மாமல்லபுரம் நகர மன்ற தலைவர் திருமதி .வளர்மதி யஷ்வந்த் ராவ், சுற்றுலாத்துறை இணை இயக்குனர் திருமதி அ.சிவப்பிரியா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொது மேலாளர் திருமதி சி.லட்சுமி பிரியா, மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### வேலூர் தொகுதியில்

# ஒன்றிய அரசின்-அறிவியல் துறையின் திட்டங்கள் என்னென்ன?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி

புதுடெல்லி, டிச. 22-

ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் வேலூர் மக்களவைத் தொகுதியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் குறித்து நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் வேலூர், காட்பாடி, கே.வி. குப்பம், குடியாத்தம், வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் ஆகிய இடங்களில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்/நிகழ்ச்சிகளின் விவரங்கள் தருக?

உள்ளூர் கல்லூரிகள் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையுடன் இணைந்து தேசிய ஆராய்ச்சி ஆய்வகங்களுடன் ஒத்துழைக்கின்றனவா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன; மற்றும் வேலூர் மக்களவைத் தொகுதியில் தொழில்நுட்ப ஸ்டார்ட்அப் நிறுவனங்களை ஊக்குவிக்க அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட பயனுள்ள நடவடிக்கைகள் யாவை?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.



அதற்கு ஒன்றிய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் புவி அறிவியல் அமைச்சகத்தின் (தனிப் பொறுப்பு) இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம், அதன் அங்கமான துறைகளான அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST), உயிரி தொழில்நுட்பத் துறை (DBT) மற்றும் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றம் (CSIR) ஆகியவற்றின் மூலம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், திறன் மேம்பாடு, தொழில்நுட்பப் பயன்பாடு மற்றும் புத்தாக்க அடிப்படையிலான தொழில் முனைவோரை ஊக்குவிப்பதற்காக மத்தியத் துறைத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்கள் மாநிலம் அல்லது மாவட்டம் சார்ந்தவை அல்ல. இருப்பினும், வேலூர் பிராந்தியத்தைச் சேர்ந்த நிறுவனங்களும் தனிநபர்களும் பின்வரும் பல்வேறு திட்டங்களின் கீழ் பலன்களைப் பெற்றுள்ளனர்:

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கான நிதி (FIST) திட்டத்தின் கீழ், DST ஆனது வேலூரில் உள்ள VIT பல்கலைக்கழகம் மற்றும் திருவள்ளுவர் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் ஆராய்ச்சி ஆய்வகங்களை மேம்படுத்தவும், பல்துறை ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவிக்கவும், மனிதவளத்திற்குப் பயிற்சி அளிக்கவும் ஆதரவளித்துள்ளது.

DSTயின் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் அறிவியல் சிறப்பை மேம்படுத்துதல் (PURSE) திட்டத்தின் கீழ், VIT பல்கலைக்கழகம் தேசிய முன்னுரிமைகளுடன் இணைந்த பணி சார்ந்த ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கும், உயர்தர ஆராய்ச்சி வெளியீடுகளுக்குப் பங்களிப்பதற்கும் ஆதரவைப் பெற்றுள்ளது.

DSTயின் மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் திட்டம் (SSTP) மூலம், தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மன்றத்தின் காப்புரிமைத் தகவல் மையம் வழியாக, வேலூரில் உள்ள திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் ஒரு அறிவுசார் சொத்துரிமை (IPR) பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இந்த முயற்சி, இப்பகுதியில் உள்ள ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு காப்புரிமை குறித்த விழிப்புணர்வு, அறிவுசார் சொத்துரிமை தாக்கல் செய்வதற்கான ஆதரவு மற்றும் புத்தாக்கப் பாதுகாப்பு ஆகியவற்றை எளிதாக்குகிறது.

உயிரி தொழில்நுட்பத் துறை (DBT) ஆனது, வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி, VIT பல்கலைக் கழகம், சி. அப்துல் ஹக்கீம் கல்லூரி, ஸ்ரீ நாராயணி மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் போன்ற முதன்மை நிறுவனங்களில் கணிசமான எண்ணிக்கையிலான உயிர் மருத்துவம், நோயறிதல், சிகிச்சை மற்றும் டிஜிட்டல் சுகாதார ஆராய்ச்சித் திட்டங்களுக்கு ஆதரவளித்துள்ளது. இந்தத் திட்டங்கள் மொழிபெயர்ப்பு ஆராய்ச்சி, மருத்துவப் பயன்பாடுகள் மற்றும் மேம்பட்ட உயிரித் தொழில்நுட்ப மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன; இதன் மூலம் மேம்பட்ட சுகாதார விளைவுகளுக்கும் அறிவியல் அறிவின் முன்னேற்றத்திற்கும் பங்களிக்கின்றன.

அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றம் (CSIR), சென்னை சிஎஸ்ஐஆர்மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் (CLRI) மூலம், வேலூர், காட்பாடி, கே.வி. குப்பம், குடியாத்தம், வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் பல திறன் மேம்பாடு, பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இந்த முன் முயற்சிகளில் தோல் துறையில் டிப்ளோமா திட்டங்கள், குறுகிய கால திறன் மேம்பாட்டுப் படிப்புகள், ஆலோசனைத் திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப உரிமம் வழங்குதல் ஆகியவை அடங்கும். இதன் மூலம் வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் பிராந்திய தொழில்துறை தொகுப்புகளை வலுப்படுத்துவதற்கும் ஆதரவளிக்கப்படுகிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (DST) ஆதரவுடன், வேலூர் தொழில்நுட்ப நிறுவனம் (VIT) மற்றும் வேலூரில் உள்ள கிறிஸ்தவ மருத்துவக் கல்லூரி (CMC) ஆகியவை, முன்னணி தேசிய ஆராய்ச்சி ஆய்வகங்களுடன் இணைந்து கூட்டு மற்றும் மொழிபெயர்ப்பு ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளன. இந்தத் திட்டங்கள் தேசிய முன்னுரிமைகளுக்கு ஏற்ப முக்கியமான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சவால்களை எதிர்கொள்கின்றன.

சிகிச்சைக்கான இரசாயனங்கள்அரிதான/அனாதை நோய்கள் திட்டத்தின் மூலம், வேலூரில் உள்ள CMC, அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி மன்றத்தின் (CSIR) ஒரு அங்கமான மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனத்துடன் (CDRI) இணைந்து, அரிதான மற்றும் அனாதை நோய்களுக்கான சிகிச்சைக்குத் தேவையான நிடிசினோனை அடிப்படைப் பொருட்களிலிருந்து உருவாக்குவதற்கான செலவு குறைந்த, சுற்றுச்சூழலுக்கு உகந்த தொகுப்பு முறைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்தி வருகிறது.

வேலூரில் தொழில்நுட்ப அடிப்படையிலான ஸ்டார்ட்அப்களையும், புத்தாக்கத்தால் உந்தப்படும் தொழில்முனைவையும் ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் தேசிய அளவிலான முன்முயற்சிகள் மூலம் பல பயனுள்ள நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த நடவடிக்கைகள் தொழில் முனைய காப்பக உள்கட்டமைப்பை வலுப்படுத்துதல், ஆரம்பகட்ட நிதி வழங்குதல், தொழில்கல்வி நிறுவன ஒத்துழைப்பை செயல்படுத்துதல் மற்றும் ஒழுங்குமுறை இணக்கத்திற்கு ஆதரவளித்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

### சென்னை வடகிழக்கு மாவட்ட

## பகுதி - ஒன்றிய - பேரூர் கழகச் செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் – மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக, ஒன்றியக் கழக, பேரூர் கழக, செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் (23.12.2025 - செவ்வாய்க்கிழமை) அன்று காலை 10.00 மணியளவில், மாதவரம் வி.ஆர்.டி. நகரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ, முன்னிலையில் நடைபெற உள்ளது.

மேலும் இந்நிகழ்ச்சியில் வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர், மாதவரம் தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ.அருண் மற்றும் திருவொற்றியூர் தொகுதி பார்வையாளர் எஸ்.மோகன் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

மேற்படி இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: 1) தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள SIR பணிகள், 2) 24.12.2025 புதன்கிழமை அன்று 100 நாள் வேலை – இனி இல்லை – ஆர்ப்பாட்டம் குறித்து. 3) கழக ஆக்கப் பணிகள்.

**மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ**

செயலாளர், சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.





சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் தெற்குப் பகுதி 89வது வட்டத்தில் வட்டத்திற்கு உட்பட்ட பாகம் எண் 298 மற்றும் பாகம் எண் 299 ஆகிய பாகங்களில் தமிழ்நாடு தலைகுனியாது! என் வாக்குச்சாவடி.. வெற்றி வாக்குச்சாவடி குறித்து அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ (வடக்குப் பகுதிச் செயலாளர்), 7வது மண்டலக் குழுத் தலைவர் பி.கே. மூர்த்தி எம்.சி, தெற்குப் பகுதிச் செயலாளர் டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி., எல்.பி.எஃப்.மோகன், சன் முனியாண்டி, எம்.இ.எஸ்.சந்தீப், கே.பிரபு ஆகியோரின் முன்னிலையில், 89வது வட்டக் கழகச் செயலாளரும் மாமன்ற உறுப்பினருமாகிய எம்.இ.சேகர் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி 36 வது வார்டில் மாமன்ற உறுப்பினர் வட்டக் கழகச் செயலாளர் ஏ.ஆர்.ஆர் மலைச்சாமி தலைமையில் தமிழ்நாடு துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு எளியோர் எழுச்சி நாள் பொதுக்கூட்டம் நலத்திட்ட உதவிகளை தலைமை கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி சேகர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இந்நிகழ்வில் க.ஜெயராமன், அ.முருகன், இரா.கருணாநிதி, எஸ்.ஆர். கமலக்கண்ணன், வி.தயாளன், ஏ.தமிழ்ச்செல்வன், டி.கமலக்கண்ணன், க.பாபு, த.ஆறுமுகம், எஸ்.அருள், ஜி.மாரிமுத்து, கேபிள் கே.தினகரன், வி.முருகன், கே.வி. ராஜன், என்.பார்த்திபன், இரா.அரிதாஸ், இரா.ரவிசங்கர் மற்றும் பகுதி,வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### உடல் உறுப்பு தானம்: இந்த ஆண்டு மட்டும் 259 பேர்களின் திருவுடல்களுக்கு மரியாதை!

# 2023 முதல் இதுவரை - 591 பேருக்கு அரசு மரியாதை!

## மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, டிச.22-

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மூளைச்சாவு அடைந்து உடலுறுப்புகள் தானமாக பெற்றதற்காக 23 செப்டம்பர் 2023 முதல் இதுவரை 591 பேருக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது எனவும் இந்த ஆண்டு மட்டும் இதுவரை 259 பேருக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது எனவும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உடலுறுப்பு தானம் செய்தவருக்கு அரசு மரியாதை செலுத்தி தெரிவித்தார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (21.12.2025) திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், இருசக்கர வாகன விபத்தில் மூளைச்சாவு அடைந்து உடலுறுப்பு தானம் செய்தஹ. பிரின்ங்லின், வயது 50 என்பவரது உடலுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் மாலை அணிவித்து அரசு மரியாதை செலுத்தினார்.

முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி, மூளைச்சாவு அடைந்து உடலுறுப்பு தானம் செய்த கொடையாளர்களுக்கு தமிழ்நாடு அரசு சார்பில் அரசு மரியாதை செலுத்தப்படும் என்று 23 செப்டம்பர் 2023 அன்று அறிவித்த பிறகு, இதுவரை தமிழ்நாடு முழுவதும் விபத்தி ன்மூலம் மூளைச்சாவு அடைந்து உடலுறுப்புகள் தானம் செய்த 591 பேருக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு 2025 இல் இதுவரை மட்டும் 259 பேருக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மட்டும் இந்த ஆண்டு 2025 இதுவரையில் மூளைச்சாவு அடைந்து உடலுறுப்பு தானம் செய்த 28 கொடையாளர்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரேவதி பாலன் மற்றும் மருத்துவப்பேராசிரியர்கள், செவிலியர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளையொட்டி

# “அன்னம் தரும் அமுதகரம்” 305 வது நாள்!

## திரு.வி.க.நகர் தெற்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை, டிச.22-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 305 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (21.12.2025), திரு.வி.க நகர் தெற்கு பகுதி: 1) வட்டம் 76, செல்லப்பா தெரு, ஸ்டாரன்ஸ் ரோடு சந்திப்பு, ஓட்டேரி. 2) வட்டம் 73, குக்ஸ் சாலை, பழைய ஓட்டேரி, தபால் நிலையம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல்படி, தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் பெருநகர சென்னை மேயர் பிரியாராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, எம்.சாமிகண்ணு, இசட்.ஆசாத், பி.ஜெ.துளசிங்கம், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, எஸ்.தமிழ்செல்வி, எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், டி.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், எம்.தமிம், எஸ்.வெங்கடேசன், வி.க.வெங்கடேசன், மீனவரணி பகுதி அமைப்பாளர் தே.ரஞ்சித்குமார், வர்த்தகர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் எஸ்.சதீஷ்குமார். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர்.ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சேக் தாவூது
### டிசம்பர் 22 (1996)



**கல்லூரியில் படிக்கும் போதே தி.மு.க.வில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர். மாணவர்கள் சார்பில் நடைபெற்ற பல்வேறு போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தி சிறை சென்றவர்.**

**பிரிக்கப்படாத நெல்லை மாவட்டத்தின் மாணவர் அணி இணைச் செயலாளராகவும், நெல்லை மாவட்டம் பிரிக்கப்பட்ட பின்னர் நெல்லை மாவட்ட மாணவர் அணிச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**1991ஆம் ஆண்டு கழக ஆட்சி கலைக்கப்பட்டபோது நெல்லையில் மாபெரும் போராட்டத்தையும், அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற ஊழலை எதிர்த்து தளபதி அவர்கள் தலைமையில் நெல்லையில் மாபெரும் போராட்டத்தையும் நடத்தியவர்.**

**“மாணவர் அணியின் கழகக் கண்மணியாக – என் மனங்கவர்ந்த மாணிக்க மணியாக – மாநிலத் துணை அமைப்பாளராக மாணவர் படைத் தளபதிகளில் ஒருவராகத் திகழ்ந்திட்ட தியாகச்சுடரே – கள்ளமிலாத் தம்பி! என்றும் என் நினைவில் வாழ்வாய்” என்று தலைவர் கலைஞர் அவர்கள், சேக் தாவூது மறைந்த போது இரங்கல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார்**

### தலைமைக் கழகம்
### தி.மு.க.